26.2.2015

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மானாவாரியிலும் புரட்சி காணும் கேழ்வரகு சாகுபடி !**



குறைந்த தண்ணீர், நிறைந்த மகசூல், அதிக லாபம், மானாவாரியிலும் புரட்சி காணும் சத்துமிகு சிறுதானியமாக கேழ்வரகு சாகுபடி விளங்குவதாக காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியது: வடகிழக்கு, தென்மேற்குப் பருவமழையை ஒட்டி விதைப்பு செய்யலாம்.சராசரியாக 400 முதல் 500 மி.மீ. மழையளவு உள்ள இடங்களில் பயிர் செய்வது மிகவும் ஏற்றதாகும். ரகங்கள்: இறவை மார்கழி பட்டம் (ரகங்கள்- கோ -12, கோ -14, கோ -15), இறவை சித்திரைப் பட்டம் (ரகங்கள்- கோ -12, கோ -14, கோ -15), மானாவாரி - ஆடிப் பட்டம், புரட்டாசிப் பட்டம் (ரகங்கள் - கோ -11, கோ -12, கோ-14,பையூர்-1,2,ஆடு365).

**நிலம் தயாரித்தல்:** கோடை மழையைப் பயன்படுத்தி பயிர் அறுவடைக்குப் பின்பு நிலத்தை சட்டிக் கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். பின்னர் ஒவ்வொரு மழைக்குப் பின்பும் கலப்பைக் கொண்டு நிலத்தை உழுதுவிட வேண்டும். கோடை உழவினால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு மழைநீர் சேமிக்கப் படுவதுடன் கோடை மழையில் முளைக்கும் களைகள் கட்டுப்படுத்தப் படுகின்றன. நிலத்தடியில் இருக்கும் கூட்டுப் புழுக்கள் உழவின்போது மேலே கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுவதால் பயிர் காலத்தில் பூச்சித் தாக்குதல் குறையும். நீர் வரத்தைப் பொறுத்து 10 அல்லது 20 சதுர

மீட்டரில் பாத்தியை அமைக்க வேண்டும்.

**விதை அளவு:** ஒரு ஹெக்டேருக்கு 5 கிலோ என்ற அளவு.

**பூசாண விதை நேர்த்தி**: விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் கலவையை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் அல்லது டிரைகோடெர்மா விரிடியை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்றளவில் நன்கு கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் விதைக்கவேண்டும்.

**நுண்ணுயிர் உரங்கள் விதை நேர்த்தி:** அசோஸ்பைரில்லம், அசோபாஸ் நுண்ணுயிரை விதையுடன் கலந்து இடுவதால் 25 சதவீதம் தழைச் சத்தை சேமிக்கலாம். ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் 600 கிராம் (3 பாக்கெட்) அசோஸ்பைரில்லம் அல்லது அசோபாஸ் நுண்ணுயிர் கலவையை குளிர்ந்த அல்லது அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்த வேண்டும். இவ்வாறு கலந்த விதைகளை 24 மணி நேரத்துக்குள் விதைத்துவிடவேண்டும்.

**நாற்றங்கால் தயார் செய்தல்**: ஒரு ஹெக்டேர் வயலில் நடவு செய்யத் தேவைப்படும் நாற்றுகள் வளர்க்க 12.5 சென்ட் (500 மீ.) நாற்றங்கால் பரப்பு தேவை. 37.5 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுடன் 500 கிலோ தொழு உரம் கலந்து, நாற்றங்கால் பாத்திகளில் சீராக பரப்பி விடவும். 3 மீட்டருக்கு 1.5 மீட்டர் அளவுள்ள 6 பாத்திகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் நீர் பாய்ச்ச 30 செ.மீ. இடைவெளி விடவும். இடைவெளியில் உள்ள மண்ணை 15 செ.மீ. ஆழத்துக்குத் தோண்டி வாய்க்கால் ஆக்கவும். தோண்டிய மண்ணை பாத்திகள் மேல் போட்டு சமன்படுத்தி விடவும். விரலால் படுக்கையின் மீது ஒரு கோடிட வேண்டும். அதன் மீது விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளைத் தூவ வேண்டும். கையினால் மண்ணைத் தூவி விதைகளை மூட வேண்டும். 500 கிலோ தொழு உரத்தை பாத்திகளின் மேல் தூவிவிட்டு விதைகளை மூடிவிட்டு மேற்பரப்பை இளக்கமாக்கவும். மேட்டுப் பாத்திகள்

ஈரமடையும் வரை, வாய்க்காலில் தண்ணீர் விட்டு பின் நிறுத்தி விடவும். மண்ணின் வகையைப் பொருத்து, நீர்ப் பாசன இடைவெளி மாறுபடும்.

**நாற்று நடுதல்**: ஒரு குத்துக்கு 2 நாற்றுகளாக நடுதல் வேண்டும். நாற்றுகளை 3 செ.மீ. ஆழத்தில் நட வேண்டும். 18 முதல் 20 நாள்களுடைய நாற்றுகளை நட வேண்டும். 30 செ.மீ.க்கு 10 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும். வேர்களை நனைக்க அசோஸ்பைரில்லம் சேற்றுக் குழம்புத் தயாரிக்க, அசோஸ்பைரில்லம் 5 பாக்கெட்டுகள் (1 ஹெக்டேருக்கு 1000 கிராம்), பாஸ்போ பாக்டீரியா 5 பாக்கெட்டுகள், அசோபாஸ் 10 பாக்கெட்டுகள் இவற்றை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து சேற்றுக் குழம்பு தயார் செய்தல் வேண்டும். இந்தச் சேற்றுக் குழம்பில் நாற்றுகளை நடுவதற்கு முன் 15 முதல் 30 நிமிடங்கள் நனைக்க வேண்டும்.

**களைக் கட்டுப்பாடு, பின்செய் நேர்த்தி:** கேழ்வரகுப் பயிர்களில், நட்ட 3-ஆம் நாள் பூட்டாகுளோர் 1 லிட்டர் என்ற களைக்கொல்லியை கைத்தெளிப்பானால் தெளிக்கவும். நிலத்தில் தெளிக்கும் போது போதியளவு ஈரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பின்னர் நட்ட 20 முதல் 25 நாள்களில் ஒரு இடை உழவு, அல்லது கைக்கிளை எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் 40-ஆம் நாள் ஒரு கைக்களை எடுத்தல்அவசியம்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை**: ஒரு ஹெக்டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பியப் பிறகு நிலத்தை உழ வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 10 பாக்கெட் (2 கிலோ) அசோஸ்பைரில்லம், 20 பாக்கெட் (4 கிலோ) அசோபாஃஸ 25 கிலோ மணல், 25 கிலோ தொழு உரம் கலந்து தூவ வேண்டும். மண் பரிசோதனைக்கு ஏற்ப உரமிடுதல் வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிட்டாலும் பின்வரும் அளவில் உரமிடலாம்.

ரசாயன உரங்களான தழை, மணி, சாம்பல் சத்து ஹெக்டேருக்கு 60:30:30 கிலோ என்றளவில் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் பாதியளவு தழைச்சத்தை மேலுரமாக இடவும். நுண்ணூட்டச் சத்துக் கலவையை 12.5 கிலோ என்ற அளவில் மணலுடன் கலந்து நிலத்தின் மேல் சீராகத் தூவ வேண்டும். தூவப்பட்ட உரத்தை நிலத்துடன் கலக்கக் கூடாது.

**நீர் நிர்வாகம்:** நாற்று நடும்போது ஒரு நீர்ப் பாசனமும் பின்பு 4-ஆம் நாள் ஒரு பாசனமும், பிறகு வாரம் ஒருமுறை நீர்ப் பாசனமும் கொடுக்க வேண்டும்.

**கேழ்வரகு பயிரைத் தாக்கும் பூச்சிகள்**: இளஞ்சிவப்பு தண்டு துளைப்பான், இலைச் சுருள்களில் புழுக்கள் தங்கி நடு இலைகளை உண்ணுவதால் துவாரங்கள் ஏற்படும். அடி இலைகள் பச்சையாக இருந்தாலும், நடுக்குருத்து மட்டும் பழுப்பு நிறமாக மாறி பிறகு காய்ந்து விடும். துளையிடப்பட்ட துவாரங்களில் பூச்சிகளின் கழிவுகள் அடைத்துக் கொண்டிருக்கும் கதிர் வெளிவரும் பருவத்தில் வெண்கதிர் அறிகுறித் தோன்றும். கதிர் மணிகள் நிரம்பாமல் வெள்ளை நிறத்தில் தெளிவாகத் தெரியும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**: பூச்சித் தாக்கத்தின் தொடக்கத்திலேயே காய்ந்த குருத்துக்களை பிடுங்கி அழித்துவிட வேண்டும். குறுகிய கால தானிய வகையல்லாத பயிர்களுடன் பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும். சரியான அளவு தழைச் சத்து உரங்களை முறையாகப் பகிர்ந்தளிக்க வேண்டும். விளக்குப்பொறி, இனக் கவர்ச்சிப் பொறியை வைக்க வேண்டும். உயிரியல் முறை கட்டுப்பாட்டு காரணிகளான டிரைகோகிராமா மைனூடம் (முட்டை ஒட்டுண்ணிகள்) போன்றவற்றை பயன்படுத்த வேண்டும்.

**வேர் அசுவினி:** அசுவினி செடியின் அடிப் பாகத்தில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுகின்றன. தாக்கப்பட்ட செடிகள் வெளிர் மஞ்சள் நிறத்துக்கு மாறி குன்றிவிடும். ஆங்காங்கே செடிகள் திட்டுத் திட்டாக

வாடி காய்ந்துவிடும். செடிகளில் தேன் துளி, தத்துப் பூச்சி கழிவுப் பொருள்களும், எறும்புகளும் காணப்படும். புல்களிலும் இந்த அறிகுறி காணப்படும். குஞ்சுகளும், முதிர்ப் பூச்சிகளும் செடியின் அடிப்பாகத்தைத் தாக்கி செடிகளின் வேரில் உள்ள சாற்றை உறிஞ்சுதால் செடிகள் வலுவிழந்துவாடிவிடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**: பாசன நீரில் குரூட் ஆயில் கலந்து விட வேண்டும். இலை சுருட்டுப் புழு, இளம் புழுக்கள் இலைகளை ஒட்டும் தன்மையுடன் நீளவாக்கில் சுருட்டி குழாய் போன்று அமைத்துக் கொள்ளும். இலையின் மடிப்புக்குள் இருந்து கொண்டு புழுக்கள் பச்சைப் பகுதியை சுரண்டித் தின்னும். சுரண்டப்பட்ட இலைகள் நரம்பு போல் ஆகி, பின்பு வெண்மையாகி உதிர்ந்துவிடும். பயிர் வளர்ச்சி பாதிக்கப்பட்டு முடிவில் மகசூல் குறையும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** தானிய வகையல்லாத பயிர்களுடன் பயிர் சுழற்சி முறையைக் கடைபிடித்தல். 5 சதவீதம் வேப்பங்கொட்டைக் கரைசல் என்ற அளவில் தழைகளில் தெளிக்க வேண்டும். நடவு செய்த 15-ஆம் நாளில் இருந்து டிரைகோகிராமா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை 1 ஹெக்டேருக்கு 1 லட்சம் என்ற அளவில் 7 முதல் 10 நாள்கள் இடைவெளி விட்டு 5 முதல் 6 முறை வயலில் வெளியிட வேண்டும். பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் சார்ந்த உயிரியல் பூச்சிக்கொல்லிகளை 1 கிலோ அல்லது 1 ஹெக்டேருக்கு 1 லிட்டர் என்ற அளவில் 7 முதல் 10 நாள்கள் இடைவெளியில் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். விளக்குப் பொறி, இனக் கவர்ச்சிப் பொறி வைக்க வேண்டும்.

**கேழ்வரகு பயிரைத் தாக்கும் நோய்கள் - பிளாட்ஸ்**: நோயின் தீவிர தாக்கத்தினால் பயிர் காய்ந்தது அல்லது எரிந்தது போல் தோற்றமளிக்கும். பூட்டை வெளிவந்த பின்பு இந்த நோய் ஏற்பட்டால் பயிர் குட்டையாக வளரும். பூட்டையின் கழுத்துப் பகுதியில் கருப்பு நிறமுடைய புள்ளிகள் தோன்றி உதிர்ந்து விடும். கழுத்துப் பகுதியில்

பிளவு ஏற்பட்டு பூட்டை ஒடிந்துவிடும். கணு கருகல் - கணுப் பகுதியில் கருப்பாகிஒடிந்துவிடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**: டிரைக்லசோல் 500 கிராம் அல்லது கார்பட்டாசிம் ஹெக்டேருக்கு 250 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். அறுவடை: நன்கு காய்ந்து முற்றிய கதிர்களை அறுவடை செய்து, களத்தில் காயவைத்து, அடித்து பின் விதைகளைப் பிரித்தல் வேண்டும். மகசூல்: மானாவாரியில் 1 ஏக்கருக்கு 1,887 கிலோ வீதமும், இறவையில் 1 ஏக்கருக்கு 2,300 கிலோ வீதமும் மகசூல் பெறலாம். இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044 - 27452371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## அதிக லாபம் தரும் கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு



கிராமப்புற குளம், குட்டைகளில் கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு மூலம் அதிக லாபம் பெறலாம். இதுதொடர்பாக மீன்வளத் துறையினர் அளித்துள்ள தகவல்கள்: காலத்தின் மாற்றத்திற்கேற்ப விவசாயிகளும் தங்களுக்கு அதிக லாபம் தரும் தொழில்களைச் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. அவர்களுக்கு கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு லாபம் தரும் தொழிலாக இருக்கும். விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள ஊராட்சிக் குளங்கள், குட்டைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடம் உரிய அனுமதி பெற்று, கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பு தொழிலில் ஈடுபடலாம். மீன் வகைகள்: கெண்டை மீன்களில் பலவகைகள் உள்ளன. அவற்றில் அதிவேக வளர்ச்சி பெறும் கெண்டை மீன்களைத் தேர்வு செய்து குளங்களில் வளர்த்தால் பெருமளவில் பயன் கிடைக்கும். தோப்பா கெண்டை, தம்பட கெண்டை, புல் கெண்டை, சாதா கெண்டை உள்ளிட்டவை குளங்களில் வளர்க்க ஏதுவான மீன்கள் ஆகும். இந்த மீன்களை குறிப்பிட்ட இன விகிதங்களின் படி ஒன்றாகக் கலந்து

வளர்த்தால் நல்ல உற்பத்தித் திறனும் லாபமும் பெற முடியும். இவ்வாறு கூட்டாக வளர்ப்பதே கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்பாகும். மீன்களின் தன்மை: ஒவ்வொரு வகை மீனும் தனித்தன்மையான உணவுப் பழக்கத்தைக் கொண்டது. கெண்டை மீன்களின் உணவு மாற்று விதிகத் திறன் அதிகம். இவை வேகமான வளர்ச்சித் திறன் உடையவை. பிறவகை மீன்களுடன் இணைந்து வாழும் திறன் உடையவை. சாதா கெண்டை: புழு, பூச்சிகள், குளத்தடியில் உள்ள சிறு தாவரங்கள், விலங்கின நுண்ணுயிரினங்கள், மட்கிய பொருள்கள். தோப்பா கெண்டை: விலங்கின நுண்ணுயிர் மிதவைகள். தம்பட கெண்டை: விலங்கின நுண்ணுயிர் மிதவைகள். புல் கெண்டை: நீர்த் தாவரங்களான ஹைடிரில்லா, வேலம்பாசி, வாத்துப் பாசி, புல். இவை தவிர அனைத்து மீன்களுக்கும் பொதுவான உணவாக மட்கிய பொருள்கள், தாவர, விலங்கின நுண்ணுயிர்கள், மிதவைகள், புழு, பூச்சிகள் ஆகியவை உள்ளன.

**உணவுப் பொருள் உற்பத்தி:** வளர்ப்பு மீன்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களின் உற்பத்தியை இயற்கை உரம், செயற்கை உரமிடுதலின் மூலம் நாமே செய்யலாம். ஒரு ஹெக்டேர் நீர்ப் பரப்புள்ள குளத்துக்கு 10 ஆயிரம் கிலோ மாட்டுச் சாணம், 200 கிலோ யூரியா, 250 கிலோ சூப்பர் பாஸ்பேட், 40 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றைச் சேர்த்து அதில் 6-இல் ஒரு பகுதியை, மீன் குஞ்சுகளை குளத்தில் விடுவதற்கு 10 நாள்கள் முன்னதாக இட வேண்டும். மீதமுள்ள உரத்தை 15 தினங் களுக்கு ஒரு முறை பகிர்ந்து இட வேண்டும். இதன்மூலம் குளத்தில் நுண்ணுயிர்கள் உற்பத்தியாகி மீன்களுக்கு உணவாகும். லாபம் தரும் கூட்டுக் கெண்டை மீன் வளர்ப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி, விவசாயிகள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர் பயன்பெறலாம்.

## பயறுவகை உற்பத்தியில் சாதனை: தமிழகத்துக்கு பிரதமர் தேசியவிருது அளிப்பு



பயறுவகை உற்பத்தியில் தேசிய அளவில் சாதனை படைத்த தமிழக வேளாண்துறை, விவசாயிகளுக்கு (கிரிஷிகர்மான்) தேசிய விருதை பிரதமர் நரேந்திரமோடி அண்மையில் வழங்கினார். தேசிய அளவில் பயறுவகைப் பயிர்களில் அதிக அளவு உற்பத்தியை(2013-14) எட்டிச் சாதனை படைத்ததற்காகத் தமிழக வேளாண் துறைக்கு பாரதப் பிரதமர் நரேந்திரமோடி கிரிஷி கர்மான் விருதை இராஜஸ்தான் மாநிலம் சூரத்கார் நகரில் மத்திய வேளாண் அமைச்சகத்தின் சார்பில் (19.2.2015) அண்மையில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். பயறுவகை உற்பத்தியில் சாதனை செய்தமைக்காக சென்னை வேளாண் இயக்குநர் மு.இராஜேந்திரன், புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் கே.எம்.ஷாஜஹான், திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் சி.சந்திரசேகரன் ஆகியோர் பாராட்டுச் சான்றிதழையும் ரூ.2 கோடிக் கான காசோலையையும் பிரதமரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். மேலும், பயறுவகை உற்பத்தியில் துவரைப் பயிரில் அதிக மகசூல் பெற்ற, கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.வீரம்மரெட்டியார், உளுந்துப் பயிரில் அதிக மகசூல் பெற்ற விழுப்புரம் மாவட்டத்தைத் சார்ந்த விசாலாட்சி ஆகியோர் தலா ரூ.2 லட்சம் பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழையும் பிரதமரிடம் பெற்றனர்.

## எஸ்.எம்.எஸ். மூலம் விவசாயத் தகவல்!



விவசாயிகளின் செல்லிடப்பேசிகளில் (செல்போன்) வேளாண்மை குறித்த தகவல்கள் குறுந்தகவல்களாக அனுப்பப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள துணை வேளாண் அலுவலகங்கள் விவசாயி களுக்கான நலத் திட்டங்கள், மானியம் உள்ளிட்ட தகவல்களை அளித்து வருகின்றன. இந்த நிலையில், விவசாயிகளின் செல்லிடப்பேசிகளுக்கு வேளாண்மை குறித்த தகவல்கள் குறுந்தகவல்களாக அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் எந்தப் பருவத்துக்கு என்ன பயிர் செய்வது, பயிர்களைத் தாக்கும் நோய்கள், அதற்குண்டான மருந்துகள், உரத்தை கையாள்வது, மானியங்கள், இடுபொருள்களின் இருப்பு நிலவரம், விலை விவரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் தினமும் அனுப்பப்பட்டு வருகின்றன. இதில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், அந்தந்தப் பகுதிகளில் உள்ள வேளாண் உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளும் வசதியும் உள்ளது. இதற்காக விவசாயிகளின் விவரம், நிலத்தின் சிட்டா நகல், செல்லிடப்பேசி எண் ஆகியவற்றை வேளாண் அலுவலர்கள் பெற்று வருகின்றனர். இது மிகவும் பயன் அளிப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

## கோதுமை சாகுபடியாளர்கள் தினம்

குன்னூர் அருகே உள்ள கிடங்குப் பகுதியில் கோதுமை சாகுபடியாளர்கள் தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு, கோதுமை வேளாண் மைய விஞ்ஞானி சிவசாமி தலைமை வகித்தார். இதில், கோ டபிள்யூ 3 என்ற புதிய வகை கோதுமையை சாகுபடி செய்வதன் அவசியத்தையும், சாகுபடி

செய்வதற்கான செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது. இதில், கோதுமை சாகுபடியாளர்கள் திரளானோர் கலந்துகொண்டனர்.

**மரக்கன்று நடும் திட்டம் தொடக்கம்**

அரசு சார்பில் மரக்கன்று நடும் திட்டம் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. தமிழகம் முழுவதும் 67 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் சென்னையில் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக விழுப்புரம் மாவட்டத்தில் ஊரக தொழில்துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ப.மோகன் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், வனத் துறை சார்பில் வனப் பகுதியில் மரங்களின் பரப்பை அதிகரித்து பசுமையை உருவாக்க வேண்டும் என்ற உண்ணத நோக்கில் வனப் பகுதிகள் மட்டுமில்லாமல் அரசு புறம்போக்கு இடங்களில் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை வளர்க்கும் வகையில் மரம் நடும் திட்டம் கடந்த 2012ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ம் தேதி சென்னை மாநகராட்சி பூங்காவில் மரக் கன்றுகளை நட்டு இத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு 67 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி யில் தேவபாண்டலம் பாண்டேஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் 67 வில்வ மரக்கன்றுகளை ஊரக தொழில்துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ப.மோகன் நட்டு தொடங்கி வைத்தார். வனப் பாதுகாப்பு அலுவலர் சே.வ.சிங், மாநில சர்க்கரை ஆணைய இணைய தலைவர் கே.ஜி.பி.ஞானமூர்த்தி, இந்து அறநிலையத் துறை உதவி ஆணையர் பிரகாஷ், ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.எஸ்.அரசு, ஒன்றியக் குழு துணைத் தலைவர் திருமால் உள்பட பலர் பங்கேற்றனர்.

**948 ஹெக்டேரில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க அனுமதி**

தருமபுரி மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க நிகழாண்டில் தோட்டக்கலைத் துறை மூலம் 948 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு

நீர்ப்பாசனம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தருமபுரி மாவட்ட திட்டக்குழுக் கூட்டம் ஊரக வளர்ச்சி முகமை அரங்கில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் அதிகாரிகள் தெரிவித்தது: மாவட்டத்தில் 2014-15ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறை மூலம் நெல், சிறுதானியங்கள், பருத்தி விதை உற்பத்தித் திட்டம் உள்ளிட்டவைகளை நிறைவேற்ற மாநில அரசு ரூ.3.03 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததில், இதுவரையில் ரூ.1.46 கோடி செலவிடப்பட்டுள்ளது. மத்திய திட்டமான தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம், விதை கிராமத் திட்டம் உள்ளிட்டவைகளுக்கு ரூ.7.04 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டதில் ரூ.5.04 கோடி செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை முழுவதும் வரும் மார்ச் மாதத்துக்குள் திட்டங்களை நிறைவேற்ற செலவிடப்படும். தோட்டக்கலைத் துறை மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நடப்பாண்டில் 30,000 ஏக்கரில் காய்கறிகள், 18,000 ஏக்கரில் பழங்கள், 40,000 ஏக்கரில் மா பயிரிடப்பட்டுள்ளது. தண்ணீரை குறைவாகப் பயன்படுத்தி விவசாயப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் மாவட்டம் முழுவதும் நிகழாண்டில் 948 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது: மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கில் மானியத்துடன் கூடிய பல்வேறு கடனுதவிகள் அளிக்கப்படுகின்றன. பட்டுக்கூடு சாகுபடியை அதிகரிக்க பட்டு வளர்ச்சித் துறையில் 90 சத மானியத்தில் கடனுதவி அளிக்கப்படுவதால் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வேளாண் திட்டங்களில் பயனடைந்த விவசாயிகளைத் தவிர்த்து அனைவருக்கும் அரசின் உதவிகள் கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் தொ.மு.நாகராஜன், சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திட்ட

அலுவலர் ஸ்ரீதர், ஊராட்சிகளின் செயலர் ஆர்த்தி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>சித்திரை மழையை நம்பி 2ம் போக நெல் நடவு துவக்கம்! கண்மாயில் தேங்கியுள்ள நீரை வைத்து ஆர்வம்</u>**

சிவகங்கை : சித்திரை மழையை நம்பி கண்மாயில் இருக்கும் நீரை பயன்படுத்தி இரண்டாம் போக சாகுபடிக்கான நெல் நாற்று நடவு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையை வைத்து, 66 ஆயிரம் எக்டேரில் விவசாயிகள் நெல் நடவு செய்து, 3.90 லட்சம் டன் நெல் விளைச்சல் செய்துள்ளனர். 52 நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் ஆர்வமுடன் நெல்லை விற்று வருகின்றனர். ஒரு போகம் நெல்லை அறுவடை செய்த விவசாயிகள், கண்மாய்களில் தேங்கியுள்ள சிறிதளவு தண்ணீரை பயன்படுத்தி கோடையில் தாக்குப்பிடிக்கும் வகையிலான மக்காச்சோளம் உட்பட பயறு வகை பயிர்களை நடவு செய்து பயன் அடையுமாறு வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனை வழங்குகின்றனர். 2ம் போகம் துவக்கம்: இந்நிலையில், 2014 செப்டம்பர் இறுதியில் வயல்களில் நெல் நடவு செய்த விவசாயிகள் ஜனவரி முதல் வாரத்தில் நெல்லை அறுவடை செய்தனர். தற்போது, கண்மாயில் இருக்கும் தண்ணீரை பயன்படுத்தி ஏ.டி.டி.,45 நெல் ரக நாற்றுக்களை பாவி, 2ம் போகத்திற்கான நாற்று நடவு செய்யும் பணிகளை துவக்கியுள்ளனர். சிவகங்கை சோழபுரம்

விவசாயி சி.காளை கூறியதாவது: சோழபுரம் எட்டுச்சேரி கண்மாய் மூலம் 300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. நல்ல மழை பெய்ததால் கண்மாயில் நீர் தேங்கி, ஒரு போக நெல்லை அறுவடை செய்து விட்டோம். கண்மாயில் இன்னும் ஒரு மாத தேவைக்கான தண்ணீர்

உள்ளதால், இரண்டாம் போக சாகுபடிக்கான நெல் நடவு பணிகளை துவக்கியுள்ளோம். சித்திரையில் நல்ல மழை பெய்தால், நடவு செய்த நெல்லை காப்பாற்றலாம். சித்திரை மழையை நம்பித்தான் மீண்டும் நெல் நடவு பணியை துவக்கியுள்ளோம். நுகர்பொருள் வாணிப கழகத்தினர், கொள்முதல் செய்த நெல்லுக்கு போதிய விலை கொடுக்கின்றனர். ஆனால், நான் முன்கூட்டியே நெல் அறுவடை செய்ததால் வியாபாரி யிடம் மூடை (66 கிலோ)ரூ.800க்கு மட்டுமே விற்று ஏமாற்றம் அடைந்தேன், என்றார்.

## <u>மீன்வள துறையில் வேலைவாய்ப்பு</u>

காஞ்சிபுரம்: மீன்வளத் துறையில், மீன்வள மேற்பார்வையாளர் தரம் - 2க்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். காலி பணியிடம்இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு அரசு மீன்வளத் துறையில், செங்கல்பட்டு மீன் துறை ஆய்வாளர் அலுவலகத்தில், மீன்வள மேற்பார்வையாளர் தரம் - 2ல் காலிப் பணியிடம் ஒன்று உள்ளது. இந்த பணியிடத்தை நிரப்ப, மீன்வளத் துறை முடிவு செய்துள்ளது. 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நீச்சல் மற்றும் வலைகளை பின்னவும் தெரிந்திருக்க வேண்டும். பொதுப்போட்டி பிரிவில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். கடந்த 2014ம் ஆண்டு ஜூலை 1ம் தேதியுடன், 18 வயதிற்கு மேற்பட்டும், 35 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். ஐந்து நாட்களுக்குள்... இந்த பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், கல்வி, ஜாதி ஆகிய சான்றிதழ் நகல்களின் சான்றொப்பம் இட்டு, மீன் துறை இணை இயக்குனர் (மண்டலம்), சென்னை அலுவலகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை-600 028 என்ற முகவரிக்கு ஐந்து நாட்களுக்குள் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம், மார்ச், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை நடக்கிறது. கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், கோமாரி நோய் வராமல் தடுப்பது மற்றும் தடுப்பூசி விழிப்புணர்வு குறித்த ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்து பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள, 3,63,300 கால்நடைகளுக்கு, மார்ச், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை, தொடர்ந்து, 21 நாட்கள் சம்பந்தப்பட்ட அனைத்து துறையினருடன் ஒருங்கிணைந்து, மாவட்டத்திலுள்ள பசு மற்றும் எருமையினங்களுக்கு, 100 சதவீதம் விடுபாடின்றி கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் நடக்கவுள்ள, சிறப்பு கிராம சபை கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டு, கோமாரி நோய் தடுப்பூசியின் அவசியத்தை எடுத்துக்கூறி, கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.நூறு சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசி வழங்கும் பணியை மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர்கள், கிராமங்களில் போதுமான விளம்பரம் செய்ய வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார்.கூட்டத்தில், கிருஷ்ணகிரி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் கந்தசாமி, தடுப்பூசி திட்ட பணிகள் குறித்து விளக்கவுரை யாற்றினார். கூட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளத்துறை, வனத்துறை, புதுவாழ்வு திட்டம், மகளிர் திட்டம், நகராட்சி, டவுன் பஞ்சாயத்து, கிராமபஞ்சாயத்து அலுவலர்கள், கால்நடை அறிவியல் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## 84 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பு ஊசி

திருத்தணி: கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை தடுக்கும் வகையில், திருத்தணி கோட்டத்தில், 84 ஆயிரம் கால்நடைகளுக்கு, வரும் ஒன்றாம் தேதி முதல், தடுப்பு ஊசி போடப்படவுள்ளது.திருத்தணி கோட்டத்தில், 19வது கால்நடை கணக்கெடுப்பின்படி, 76,649 பசு, காளை மாடுகள், 7,305 எருமை மாடுகள் என, மொத்தம் 83,954 கால்நடைகள் உள்ளன. ஆண்டுக்கு இருமுறை...

இந்த கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை விரட்ட, ஆண்டுக்கு இருமுறை கோமாரி நோய் தடுப்பு ஊசி, கால்நடை துறை மருத்துவர்கள் மூலம் போடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்தாண்டு முதல் கட்ட, கோமாரி தடுப்பு ஊசி, வரும் மார்ச் 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை, போடப்படவுள்ளது.திருத்தணி கால்நடை துறை உதவி இயக்குனர் மருத்துவர் செல்லத்துரை கூறியதாவது: கோமாரி நோய் தடுப்பு ஊசி, 84 ஆயிரம் கால்நடைகளுக்கு போடப்படவுள்ளது. இதற்காக, ஒரு மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், ஒரு உதவியாளர் என, மூன்று பேர் கொண்ட, 20 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மார்ச்21க்குள்...

இவர்கள், அந்தந்த கிராமங்களுக்கு நேரிடையாக சென்று, காலை 6:00 மணி முதல், காலை 8:00 மணி வரையும், மாலை 4:00 மணி முதல், இரவு 7:00 மணி வரையும், கோமாரி தடுப்பு ஊசி போடுவர். மேலும், அனைத்து கிராமங்களிலும் கோமாரி நோய் தடுப்பூசி போடும் நாளுக்கு முன்னதாக துண்டு பிரசுரம், தண்டோரா போடப்படும். மார்ச் 21ம் தேதிக்குள், கோட்டத்தில் உள்ள, அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்படும். இவ்வாறு அவர் கூறினார். ஒரு மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், ஒரு உதவியாளர் என, மூன்று பேர் கொண்ட, 20 குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன

## நாட்டுக் கோழி வளர்ப்பு நோய் தடுப்பு வழிமுறை

பழநி : கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு நோய்தடுப்பு வழிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறது. அதேசமயம் கிராமப்புறங்களில் வீடுகளில் வளர்க்கும் நாட்டுக் கோழிகளுக்கு முறையான நோய்தடுப்பு வழிமுறைகள் தெரியாமல், நோய் தாக்கி கோழிகள் இறந்து போவதால், நஷ்டம் ஏற்படுகிறது. பொதுவாக வெள்ளை கழிச்சல் நோய் தான் நாட்டுகோழிகளுக்கு முதல் எதிரியாக உள்ளது. இந்நோய் ஒருகோழிக்கு வந்தாலும் மற்றவைகளும் பாதிக்கப்படும். ஆகையால் கோழிகள் ஆரோக்கியமாக இருக்கும் போதே தடுப்பூசிகள் போட வேண்டும். வட ஆற்காடு ராணிப்பேட்டையில் இருந்து மருந்துகள் வரவழைக்கப்பட்டு கால்நடை மருத்துவமனைகளில் இலவசமாக தடுப்புஊசி போடப்படுகிறது. இயற்கையில் குப்பையை கிளறி, நிலக்கழிவுகளையும், பச்சை புற்களையும் நாட்டுகோழிகள் உண்பதால் அதில் சத்தும் ருசியும் அதிகம் கிடைக்கிறது. இனிவரும் கோடை காலத்தில் கழிச்சல் நோய் தாக்கத்திலிருந்து தப்பிக்க, நாட்டுக்கோழி வளர்ப்போர் தடுப்பூசியை அருகேயுள்ள கால்நடை மருத்துவமனைகளில் இலவசமாக போட்டுக்கொள்ளலாம் என பழநி கால்நடை பராமரிப்புதுறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## துவரை சாகுபடியில் சாதனைகரூர் விவசாயிக்கு மத்திய அரசு விருது

கரூர்:துவரையில் அதிக மகசூல் எடுத்த, கரூர் மாவட்ட விவசாயிக்கு, மத்திய அரசு விருது வழங்கப்பட்டுள்ளது.கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி ஆற்றின் மூலம், ஆயிரக்கணக்கான ஏக்கர், பாசன வசதி பெறுகிறது. பாசனத்தின் மூலம் நெல், கரும்பு, கோரை போன்றவை அதிகம் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில், ஒரு பகுதி பாசன வசதி பெற்றாலும், அரவக்குறிச்சி, வெள்ளியணை, க.பரமத்தி,

உப்பிடமங்கலம் உள்ளிட்ட பகுதிகள் மானாவாரி நிலங்களாக உள்ளன. பருவமழை காலங்களில், இப்பகுதியில் சோளம், கம்பு, துவரை, நிலக்கடலை போன்றவை சாகுபடி செய்யப்படுகிறது.கடந்த, 2010ம் ஆண்டில் இருந்து, 2013ம் ஆண்டு வரை, பருவமழை பொய்த்ததால், மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடி நடைபெறவில்லை. கடந்தாண்டு துவக்கம் மற்றும் இறுதியில், பருவமழை ஓரளவு பெய்ததால், சோளம், துவரை, கம்பு, நிலக்கடலை போன்றவை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.மத்திய அரசு சார்பில், இந்தியா முழுவதும் மாவட்டங்களில், சிறந்த பயிர் சாகுபடியில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளை தேர்வு செய்து, மத்திய அரசின், "கிரிஸ் கார்மன் விருது' வழகப்படுகிறது. கடந்த, 2013-14ம் ஆண்டில் பஞ்சாப், ஒடிஸா, மேகாலயா, சதீஷ்கர், மத்திய பிரதேசம், அசாம், தமிழகம், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில், அரிசி, கோதுமை, துவரை, உளுந்து உள்ளிட்ட பயிர்களில் சிறந்த மகசூல் எடுத்த, 18 விவசாயிகளை தேர்வு செய்து விருது வழங்கப்பட்டது. கரூர் மாவட்டத்தில், காரீப் பருவத்தில் மாவட்ட அளவில், ஒரு ஹெக்டரில், 1,372 கிலோ துவரை மகசூல், தான்தோணி வட்டாரத்தில், 1,560 கிலோ துவரை மகசூல் கிடைக்கும். விவசாயி வீரமரெட்டியார், ஒரு ஹெக்டரில், 2,240 கிலோ மகசூல் எடுத்ததற்காக, மத்திய அரசு விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார். சமீபத்தில், ராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில், விவசாயி வீரரெட்டியாருக்கு, பிரதமர் மோடி விருது வழங்கினார். விருது பெற்றது குறித்து விவசாயி வீரமரெட்டியார் கூறியதாவது: கடந்த ஆண்டில் என் நிலத்தில் துவரை சாகுபடி செய்தேன். 120 நாள் முதல், 148 நாளில் துவரை அறுவடைக்கு வந்து விடும். ஒரு ஏக்கருக்கு, இரண்டு மூட்டை உரம் மற்றும் தொழுஉரம் போன்றவை தெளித்தேன். பருவமழை கைகொடுத்ததால், துவரை மகசூல் நன்றாக இருந்தது.

வேளாண்மை துறையினர் துவரை மகசூல் குறித்து ஆய்வு செய்தனர். இதில், ஒரு ஹெக்டரில், 2,240 கிலோ மகசூல் எடுத்தது தெரிய வந்ததால், மத்திய அரசின் விருதுக்கு பரிந்துரை செய்தனர். அதை தொடர்ந்து, ராஜஸ்தானில் நடந்த நிகழ்ச்சியில், எனக்கு விருது வழங்கப்பட்டது. தமிழகத்தில், விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த விசாலாட்சி என்பவர் உளுந்து பயிர் சாகுபடிக்காக, விருது வாங்கினார்.இவ்வாறு அவர் கூறினார்.

**மாமரங்களில் பூக்கள் மாம்பழ வரத்து அதிகரிக்கும்**

சிவகங்கை : மாவட்டத்தில் மாமரங்களில் பூக்கள் அதிகம் பூத்துள்ளது. ஏப்ரலில் மாம்பழ வரத்து அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்க் கின்றனர். சிவகங்கை,காளையார்கோவில்,கல்லல், எஸ்.புதூர் ஒன்றியங்கள் மட்டுமின்றி பரவலாக அனைத்து பகுதி விவசாயிகளும் மாமரங்களை பராமரித்து வருகின்றனர். மாவட்டத்தில் 6 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் மாமரங்கள் வைத்துள்ளனர். இங்கு நீலம், பெங்களூரா, அல்போன்சா, பங்கனப் பள்ளி வகை மரங்கள் அதிகம் உள்ளன. இதில், அல்போன்சா ரக மாம்பழங்கள் மட்டுமே, விவசாயி களால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மற்ற ரக மாம்பழங்கள் உள்ளூரிலேயே விற்கப் படுகின்றன. பூக்கள் அதிகரிப்பு: மாமரங்களில் பூக்கள் அதிகளவில் பூத்து குலுங்குகின்றன. தற்போது, பலத்த காற்று, மழையின்றி இருந்தால் பூக்கள் சேதம் அடையாமல், அப்படியே விளையும். இதனால் மாம்பழங்களின் வரத்தும் அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்," நான்கு வகையான மாம்பழ ரகங்களை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். இதில், அல்போன்சா ரக மாம்பழங்களை ஏற்றுமதி செய்கின்றனர். மற்ற ரக மாம்பழங்களை விற்பனைக்காக பிற மாவட்டங்களுக்கு அனுப்பு கின்றனர். தற்போது

பூக்கும் சீசன் துவங்கிவிட்டது. ஏப்ரல் முதல் ஜூன் வரை மாம்பழம் வரத்து இருக்கும்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தி.மலை மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் வரும் 1ம் தேதி தொடங்குகிறது</u>**

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில், மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பு சிறப்பு முகாம் வரும் 1ம் தேதி முதல் தொடர்ந்து 20 நாட்கள் நடைபெற உள்ளது. குளிர்காலம் முடிந்து, கோடை காலம் தொடங்கும் போதும், மழை காலங்களிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்படுவது வழக்கம். அதனை தடுப்பதற்காக, ஆண்டுதோறும் இரண்டு முறை மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. அதன்படி, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் 1ம் தேதி தொடங்கி, 21ம் தேதி வரை தொடர்ந்து 20 நாட்கள் சிறப்பு முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற பகுதிகளில் தடுப்பூசி முகாம் நடைபெறும் நாட்கள் விபரம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கால்நடைத்துறை மூலம் அந்தந்த கிராமங் களில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, முகாம் நடைபெறும் நாளில், மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டு, நோய் வராமல் பாதுகாத்திட வேண்டும் என கலெக்டர் ஞானசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>நாமகிரிப்பேட்டை மஞ்சளுக்கு இந்தியாவில் விலை அதிகம்</u>**

உலகத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பில் இந்தியாவுக்கு 5வது இடமாக இருந்தாலும், உற்பத்தியில் 2வது இடத்தை பிடித்துள்ளது. ஆனால் தரத்தில் இந்திய மஞ்சளுக்கு தான் முதலிடம். அதிலும் தமிழகத்தில் ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, ஈரோடு பகுதிகளில் விளையும் மஞ்சள் முதல்தரமானவை. இந்திய அளவில் பெரிய மஞ்சள் மார்க்கெட்டான ஆந்திரா மாநிலம் நிஜாமாபாத்தில் ஈரோடு, சேலம் மஞ்சள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இங்கு வாங்கப்படும் மஞ்சள் சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா, யூரோப்பிய நாடுகள், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மருந்து, ரசாயனம், அழகுசாதன பொருட்கள், பெயிண்ட் நிறம், நறுமண எண்ணெய் ஆகியவற்றுக்கு இந்திய மஞ்சள் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது. தமிழக விவசாயிகளின் முக்கியமான பணப்பயிர் மஞ்சள். மங்களகரமான பயிரும் கூட. இதனால்தான் பொங்கல் திருவிழா வழிபாட்டில் மஞ்சளுக்கு முக்கிய இடம் அளித்துள்ளனர். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் மஞ்சள் விலை தங்கத்திற்கு நிகராக விற்றது. தங்கத்தை விட கூடுதலாக மூட்டை ரூ.18 ஆயிரம் வரை விற்பனையானது. இதனால் இந்தியா முழுவதும் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு அதிகமானது. இந்தியாவில் 6 மாநிலங்களில் மஞ்சள் விளைந்தாலும் ஆலப்புலா, சாங்லி, நிஜாம்பாத், ராஜ்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, நாமகிரிப்பேட்டை ஆகிய பகுதிகளில் மட்டுமே மஞ்சளுக்கு பெரிய அளவில் மார்க்கெட் உள்ளது. கடந்த 2012ம் ஆண்டு மார்கெட் நிலவரப்படி இந்தியாவில் நாமகிரிப்பேட்டை மார்கெட்டில் தான் மஞ்சளுக்கு அதிகபட்ச விலை கிடைத்துள்ளது. உருண்டை ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.5,700 குறைந்தபட்சமாக 3,900க்கும் விற்பனையாகியுள்ளது. சராசரி

விலை ரூ.4,800. விரலி ரகம் அதிகபட்சமாக ரூ.8000, குறைந்தபட்சமாக ரூ.4,900க்கும் விற்பனையானது. சராசரி விலை ரூ.6450. அதே போல் 2013ம் ஆண்டு விரலிக்கு அதிகப்பட்சமாக மூட்டை ரூ.9,399க்கு விலை போனது. இதுதான் அன்றைய வாரம் இந்திய அளவிலான சந்தையில் அதிகவிலையாகும்.

சிலதகவல்கள்....

மஞ்சள் விலை மூட்டையில் குறிப்பிடப்படுகிறது. மஞ்சள் மூட்டை என்பது 100 கிலோ கொண்ட ஒரு குவிண்டால் ஆகும். ஆனால், 100 கிலோ மூட்டையை தூக்குவதற்கு, கொண்டு செல்வதற்கு சிரமம் என்பதால் 65 கிலோ கொண்ட மூட்டைகளாக தைக்கின்றனர்.

## 2.42 லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

கோவை, : கோவை மாவட்டத்தில் கோமாரி நோய் பரவலை தடுக்க 2.42 லட்சம் மாடுகளுக்கு வரும் மார்ச் 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. தமிழகத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் பரவுவதை தடுக்க மார்ச் 1ம் தேதி முதல் தடுப்பூசி போடப்படுகிறது. கோமாரி நோய் என்பது கால்நடைகளை தாக்கி கொப்பளங்களை ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்று நோயாகும். இந்நோய் வாயிலும், குளம்புகளுக்கு இடையிலும் கொப்பளங்களை உண்டாக்கி கடுமையான காயங்களை ஏற்படுத்தும். இதனால், பால் உற்பத்தி பாதிப்பு, இனவிருத்தி பாதிப்பு மற்றும் கன்றுகளில் அதிக இறப்பு ஏற்பட்டது. இதனை கட்டுப்படுத்த தடுப்பூசிபணி, கடுங்கண்காணிப்பு, வர்த்தக தடை மற்றும் கால்நடை களை தனியே பிரித்து வைத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டது. மேலும், நோயை கட்டுப்படுத்த மத்திய அரசின் உதவியுடன் மாநிலம் முழுவதும் 7 சுற்று கோமாரி நோய் தடுப்பு பணிகள் மேற் கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து வரும் மார்ச் மாதம் முதல் 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள 2 லட்சத்து 42 ஆயிரத்து 775 மாடுகளுக்கு தடுப்பூசிகள் வரும் மார்ச் 1ம் தேதி முதல் 22ம் தேதி வரை போடப்படவுள்ளது. இதில், விடுபடும் மாடுகளுக்கு மார்ச் 22ம் தேதி முதல் 31ம் தேதி வரை சிறப்பு முகாம் மூலம் தடுப்பூசிகள் போடப்பட வுள்ளது. இது குறித்து மாவட்ட கால்நடைபராமரிப்பு துறை இணை இயக்குனர் பெருமாள்சாமி கூறுகையில் “ மார்ச் 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கவுள்ளது. கடந்த ஆண்டு நடந்த தடுப்பூசி முகாமில் நூறு சதவீதம் மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டது. இதனால், நோய் பாதிப்பு என்பது இல்லை. எனவே, இந்த ஆண்டும் நூறு சதவீத மாடுகளுக்கு தடுப்பூசிகள் போட திட்டமிட்டுள்ளோம்“ என்றார்.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி</u>

திருப்பூர், : திருப்பூர் கலெக்டர் கோவிந்தராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள பசுவினம் மற்றும் எருமையினங் களுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி 8வது சுற்று மார்ச் 1 முதல் 21ம் தேதி வரை மேற்கொள்ளப்பட உள்ளது. கலப்பின மாடுகளை கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந் நோயினால், கறவை மாடுகளில் பால் உற்பத்திக் குறைவு, எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளின் சினைபிடிப்பு தடைபடுகிறது. மேலும், இளங்கன்றுகளில் இறப்பு சதவீதம் அதிகமாக ஏற்படும். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்று களுக்கு மார்ச் 1ம் தேதி முதல் ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தங்களது கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி தவறாமல் போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், விபரங்களுக்கு அருகிலுள்ள கால்நடை

மருந்தகங்களை அணுகி தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை(26ம்தேதி) நடக்கிறது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது :பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் நாளை (26ம் தேதி) காலை 10மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டஅரங்கில் நடைபெறவுள்ளது.இதில் வேளாண் சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.விவசாயிகள் தங்கள்பகுதி குறைகளை தெரிவித்து தீர்வு காணலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## பண்ணை குழு ஆலோசனை கூட்டம்

அறந்தாங்கி, : அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் வட்டார அளவிலான பண்ணை குழு ஆலோ சனை கூட்டம் தலைவர் ஆத்மநாதன் தலைமை யில் நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் பொன்னையா முன்னிலை வகித்தார். கூட்டத்தில் வேளாண் துறை சார்ந்த துறைகளான தோட்டக் கலை, வேளாண் பொறி யியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிக வரித் துறை அலுவலர்கள், அட்மா குழு உறுப்பினர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்ட ஏற்பாடு களை வட்டார உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கலையரசன், ராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

## உழவர் நண்பர்களுக்கு ஊக்கத் தொகை அட்மா ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்

பொன்னமராவதி, : பொன்னமராவதி வட்டாரத்தில் உள்ள உழவர் நண்பர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவது என்று பொன்னமராவதியில் நடைபெற்ற அட்மா குழு ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வேளாண் கோட்டத்தில் அட்மா வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு வேளாண் உதவி இயக்குநரும், அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளருமான ஜெயபாலன் தலைமை வகித்தார். அட்மா ஆலோசனைக் குழுத் தலைவர் காசி கண்ணப்பன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் 2014-15ம் நிதியாண்டில் அட்மா திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள், 2015-16ம் நிதியாண்டுக்கான செயல் திட்டம் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து வேளாண் துறை மற்றும் அதைச் சார்ந்த பல்வேறு துறைகளின் அலுவலர்கள், அட்மா ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், உழவர் மன்ற நண்பர்கள் உள்ளிட்டோர் ஆலோசனை மேற்கொண்டனர். இதில், உழவர் நண்பர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை அட்மா தொழில்நுட்ப உதவியாளர்கள் பிரியங்கா, ராஜி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.முன்னதாக, வேளாண் துணை அலுவலர் மாணிக்கவாசகம் வரவேற்றார். முடிவில் வேளாண் உதவி அலுவலர் முருகேசன் நன்றி கூறினார்.

## பரவசப்படுத்தும் பரப்பலாறு அணை

ஒட்டன்சத்திரத்தில் இருந்து சுமார் 15 கிமீ தூரத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் பரப்பலாறு அணை அமைந்துள்ளது. இந்த அணை 1972ம் ஆண்டு திமுக ஆட்சியின்போது அடிக்கல் நாட்டப்பட்டது. 1975ம்

ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது. 90 அடி கொள்ளளவு உடையது. இந்த அணையில் இருந்து தண்ணீர் விருப்பாட்சி தாழையூத்து நீர்வீழ்ச்சியாக கீழே வந்து, நேரடியாக 2,332 ஏக்கர் விவசாய பாசனத்திற்கு செல்கிறது. சுமார் 5 ஆயிரம் ஏக்கர் மறைமுகமாகவும் பாசன வசதி பெறுகிறது. ஒட்டன்சத்திரம் நகருக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணைவிளங்குகிறது

**வியாழக்கிழமையும்... விருப்பாட்சி பழமும்...!**

ஒட்டன்சத்திரம் - பழநி சாலையில் 5வது கிமீட்டரில் விருப்பாட்சி உள்ளது. விருப்பாட்சியில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சந்தை மிகவும் புகழ் பெற்றது. இந்த சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும். இந்த சந்தையில் விருப்பாட்சி பழம் என்று அழைக்கப்படும் மலை வாழைப் பழம் விற்பனைக்கு பெயர் பெற்றது. ஆடு, மாடு சந்தையும் இங்கு பிரசித்தி பெற்றதாக உள்ளது.

**சொக்க வைக்கும் சோத்துப்பாறை அணை**

பெரியகுளம் அருகே சுமார் 9 கிமீ தொலைவில் சோத்துப்பாறை அணை உள்ளது. மலையின் மேற்பகுதியில் அமைந்துள்ள இந்த அணையையும், சுற்றுப்புற பகுதிகளையும் ரசித்துக் கொண்டே இருக்கலாம். இந்த அணையில் இருந்து பெரியகுளம், பாப்பியன்பட்டி கண்மாய், தாமரைக்குளம் ஆகிய கண்மாய்களுக்கு நீர்வரத்து உள்ளது. அதே போன்று புது வாய்க்கால் மூலம் லட்சுமிபுரம், கைலாசப்பட்டி பகுதிகளின் விவசாயத்திற்கும் தண்ணீர் திறந்து விடப்படும். இந்த கண்மாய்கள் மூலம் சுமார் 2,932 ஏக்கர் பரப்பளவு உள்ள விவசாய நிலத்திற்கு பாசனம் கிடைக்கிறது. இங்கு நெல், வாழை, கொடிக்கால், கரும்பு, தென்னை உள்ளிட்டவைகள் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அணையின் மொத்த உயரம் 126.28 அடி. பெரியகுளம் பகுதி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தொடர் மழை பெய்தால் அணையின் நீர்

மட்டம் உயரும். குறைந்த நீர்ப்பிடிப்பு பகுதி என்பதால் ஒரு சில நாட்கள் கனமழை பெய்தாலே அணை முழுக்கொள்ளளவை எட்டி தண்ணீர் நிரம்பி வழியும். இந்த தண்ணீர் வீணாவதால் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியை தூர்வார வேண்டுமென இப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அணையில் இருந்து பெரிய குளத்துக்கு குடிநீருக்காக 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

## <u>மானியவிலையில் வேளாண் கருவிகள்</u>

சிவகங்கை, : சிவ கங்கை மாவட்டத்தில் மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை: சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்துறையின் மூலம் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. நெல் சாகுபடியில் நவீன யுக்திகளை கையாள வசதியாக தேவை யான வேளாண் கருவிகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. சுழற் கலப்பைகள், நெல் நடவு இயந்திரம், நீர் பாசனத்திற்குரிய ஆயில் இன்ஜின்கள் மற்றும் பம்பு செட்டுகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், கைத்தெளிப்பான்கள், விசைத்தெளிப்பான்கள், நெல் அறுவடை இயந்திரம் உள்பட பல்வேறு வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தேவையான கருவி களை பெற தங்கள் பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள லாம். முன்னுரிமை பதிவேட்டின் அடிப்படையில் கருவிகள் வழங்கப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் வருகிற 1-ந் தேதி தொடங்குகிறது</u>



கால்நடைகளுக்கு கோமரி நோய் தடுப்பூசி போடும் முகாம் வருகிற மார்ச் மாதம் 1-ந் தேதி முதல் 21ம் தேதி வரை நடைபெறுகிறது.
கூட்டம்
கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோமாரி நோய் வராமல் தடுப்பது மற்றும் தடுப்பூசி விழிப்புணர்வு குறித்த ஒருங் கிணைப்பு குழு கூட்டம் நடந் தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தலைமை தாங்கி பேசியதாவது:- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 3 லட்சத்து 63 ஆயிரத்து 300 கால்நடைகளுக்கு வருகிற மார்ச் 1-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை தொடர்ந்து 21 நாட்கள் சம்பந்தப்பட்ட அனைத்து துறையினருடன் ஒருங்கிணைந்து மாவட்டத்தி லுள்ள பசு மற்றும் எருமை யினங்களுக்கு 100 சதவீதம் விடுபாடின்றி கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விழிப் புணர்வு ஏற்படுத்த வேண்டும். இது குறித்து பொதுமக் களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கிருஷ் ணகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சி களிலும் நாளை (வெள்ளிக் கிழமை) நடைபெற உள்ள சிறப்பு கிராம சபை கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, கோமாரி நோய் தடுப்பூசி போடுவதன் அவ சியத்தை எடுத்துக்கூறி, கிராம மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்த வேண் டும். 100 சதவீதம் கால்நடை களுக்கு தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்ள

சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் கிராமங்களில் போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில், கிருஷ்ணகிரி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் கந்தசாமி, தடுப்பூசி திட்ட பணிகள் குறித்து பேசினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண் டனர்.